கொள்ளிடம் ஆற்றின் குறுக்கே பாலம்

* 3325 திரு. க. சொ. கணேசன் :

மாண்புமிகு பொதுபணித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா:

திருச்சி, தஞ்சை இரு மாவட்டங்களையும் இணைக்கும் வகையில் கொள்ளிடம் ஆற்றின் குறுக்கே நீலத்தநல்லூர்மதனத்தூர் இணைப்பு பாலம் கட்டிட அரசிடம் செயற் குறிப்பு உள்ளதா?

மாண்புமிகு திரு. துரைமுருகன் : தலைவர் அவர்களே, ஆம்.

திரு. க. சொ. கணேசன்; பேரவைத் தலைவர் அவர்களே, தஞ்சை, திருச்சியை இணைக்கின்ற அந்த நீலத்தநல்லூர் மதனத்தூர் கொள்ளிடத்தின் குறுக்கே கட்ட வேண்டிய பாலம் மிகவும் முக்கியமான பாலம். அணைக்கரையிலே இருக்கின்ற பாலம் ஆங்கிலேயர் ஆட்சியிலே கட்டப்பட்டது. அது சற்றேறத் தாழ நூறு ஆண்டுகளுக்கு மேலாகின்ற காரணத்தினால் பாலம் இப்போது ஆட்டம் காணுகின்ற நிலையில் இருக்கின்ற காரணத்தினால் வெகு சீக்கிரம் போக்குவரத்தை பாதிக்கும் என்று கருதுகிறேன். ஆதலால் இதை அரசு உடனடியாகக் கட்ட முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. துரைமுருகன் : தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர்கள் தெரிவித்த கருத்துக்கு இணங்க தற்போது கும்பகோணத்திற்கு வடக்கே உள்ள நகரங்களான பெரம்பலூர் அரியலூர், ஜெயங்கொண்டம், விருத்தாசலம் மற்றும் சென்னைக்குச் செல்லும் வாகனங்கள் திருமானூர் அணைக்கரை பாலங்கள் வழியாக செல்லும் நிலைமை உள்ளது. ஆனால் புதியதாகக் கட்ட இருக்கும் பாலம் நீலத்தநல்லூர் வழியாக கும்பகோணத்தையும், மதனத்தூர் வழியாக ஜெயங்கொண்டத்தையும் நேரடியாக இணைக்கும், ஆகையினால் ஜெயங்கொண்டத்தை நேரடியாக இணைக்கின்ற காரணத்தினால் மாண்புமிகு உறுப்பினருக்கு அதிலே அதிக அக்கறை இருப்பதிலே மாறுபட்ட கருத்து அல்ல. எனவே இப்படி ஒரு பாலத்தை கொள்ளிடம் ஆற்றின் குறுக்கே கட்டுவதற்கு உயர் மட்ட பாலமாக கட்டினால் 11 கோடி ரூபாய் செலவாகிறது. முழுங்கு பாலமாக கட்டினால் 5 கோடி ரூபாய் செலவாகிறது. எனவே அதற்காகவே போக்குவரத்து வளர்ச்சி நிதியுதவி கழகத்திடமிருந்து கடனாகப் பெற்று அதை கன்ஸ்ட்ரக்ஷன் கார்ப்பரேஷனிலே டர்ன்-கீ போஸீஸில் ஒப்படைத்து பாலத்தை முடிக்கலாமா என்பதைக் குறித்து 8.3.1989 முதல் 11-3-89 வரை தலைமைச் செயலகத்திலே ஒரு கருத்து பரிமாற்றம் செய்யப்பட்டது. அந்த பாலத்திற்கான செலவை 10 ஆண்டுக்காலம் அந்த பாலத்தின் மீது போகின்ற வண்டிகளிலிருந்து வசூல் செய்துக் கொள்ளலாம் என்றும் ஒரு முடிவு எடுத்து அதை இப்போது கன்ஸ்ட்ரக்ஷன் கார்ப்பரேஷனுக்கு

'1990 ஏப்ரல் 18]

நம்முடைய சீ.ஈ. கடிதம் எழுதியிருக்கிறார்கள். எனவே, முடிந்த முடிவு எடுத்த பிறகு இந்த பாலம் கட்டுவதற்கு வேண்டிய நடவடிக்கைகளை மேற்கொள்ளும்.

திரு. க. சொ. கணேசன்: தலைவர் அவர்களே, நான் முதலிலே குறிப்பிட்டதைப் போல அணைக்கரை பாலம் ஆட்டம் காணுகின்ற நிலையில் இருப்பதால் அது இடிந்து விழுவதற்குள்ளாகவே வெகு சீக்கிரம் அரசு எல்லா நடவடிக்கைகளையும் எடுத்து கட்டுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. துரைமுருகன்: தலைவர் அவர்களே, அது இடியாது. இருந்தாலும், இந்தப் பாலம் கட்டப்படும்.

வராக நதியில் பாலம் கட்டுதல்.

*3799 திரு. எல். மூக்கையா:

மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) பெரியகுளம் ஒன்றியத்தில், வடுகப்பட்டி- எ.காமாட்சிபுரம் சாலையை இணைக்கும் வகையில் வராக நதியில் பாலம் கட்டும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது கட்டப்படும்?

மாண்புமிகு திரு. துரைமுருகன்: தலைவர் அவர்களே,

(அ) இதற்கான திருத்திய நிர்வாக ஒப்புதல் ஆணை 19.1.89-ல் வழங்கப்பட்டுள்ளது.

(ஆ) இப்பாலத்திற்கான அடித்தள வேலைகள் தற்போது நடைபெற்று வருகின்றன.

திரு. எல். மூக்கையா: பேரவைத் தலைவர் அவர்களே, பெரியகுளம் வடுகப்பட்டி—எ. காமாட்சிபுரம் சாலையை இணைக்கும் வகையில் வராக நதியில் கட்ட இருக்கும் பாலத்தினுடைய திட்ட மதிப்பு எவ்வளவு? அது எவ்வளவு காலத்தில் கட்டி முடிக்கப்படும் என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. துரைமுருகன்: தலைவர் அவர்களே, இந்த வடுகபட்டி—எ. காமாட்சிபுரம் வராக நதியின் மீது கட்டப்படுகின்ற பாலத்தினுடைய மொத்த மதிப்பீடு ரூ.35.20 இலட்சம் ஆகும். அதோடு இப்போது ரூ.19.50 இலட்சம் செலவில் ஒரு துணை பாலம் கட்டுவதற்கு வேண்டிய நடவடிக்கைகளும் அதோடு இணைத்து சேர்த்திருக்கிறோம். அது லம்ப்சம் ப்ரொவிஷனுள் அடங்கும்.

திரு. எல். மூக்கையா: தலைவர் அவர்களே, அந்தப் பாலம் எவ்வளவு காலத்திற்குள் கட்டி முடிக்கப்படும் என அறிய விரும்புகிறேன்,